பத்திரிகை ஆறு

Chundikuli Branch Library

Registered as a Newspaper

Y. M. C. A.

# உதயன்

விலை ரூபா 5-00

மடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 08 வெள்ளிக்கிழமை (23-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 237

## ஜூலை 23 அதிரடியின் பத்தாண்டு நிறைவு:

# புலிகள் தாக்கலாம் என அஞ்சி கொழும்பில் தீவிர பாதுகாப்பு!

### நல்லூரில் நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நாளை காலை இடம்பெறும் பூசை அபிசேகங்களைத் தொடர்ந்து சரியாக முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் நிகழும்

அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை 27 தினங்கள் நடைபெற உள்ள மகோற்சவத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்

(5ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் கண்டபடி கைது

கொழும்பு, ஜூலை 23

திருநெல்வேலியில் 1983 ஜூலை 23 ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட பத்தாண்டு நிறைவு நாள் இன்றாகும்.

அதனையொட்டி. புலிகள் கொழும்பில் பெரும் தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சத்தினால் அங்கு பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாட்டின் முதற்படியாக கடந்த ஒரு வாரமாக தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கண்டபடி ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரத்திலும், புறநகரப் பகுதிகளிலும் பொலீஸாருடன் இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த மூன்று நான்கு தினங்களாக வீதிச் சோதனையும் மிகத் தீவிரமாக்கப் பட்டுள்ளது.

திருநெல்வேலித் தாக்குதலே 1983 இல் இனக்கலவரத்துக்கு வழி செய்தது என்றும் அந்த இனக்கலவரமே இன்றைய வடக்கு—கிழக்கு யுத்தத்துக்கு கருவாக இருந்தது என்றும் அவதானிகள் தெரிவித்தனர். (அ-6)

### உன்னிச்சையில் இரு முகாம்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

மட்டக்களப்பு மாவட்டம் உன்னிச்சைப் பகுதியில் புதிதாக இரண்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆறாம் கட்டையில் ஒரு பாடசாலையிலும், கரவெட்டியிலும் இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஓ-5)

### நினைவு தூபிக்கு மலரஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 23

திருநெல்வேலியில் உள்ள லெப். செல்லக்கிளி அம்மான் நினைவுத் தூபியில் இன்று காலை 9 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்படும்.

லெப். செல்லக்கிளி அம்மான் 1983 ஜூலை 23 ஆம் திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற கரந்தடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 13 பேரை அழித்து வீரச்சாவு அடைந்தவர் என்பது தெரிந்ததே. (ஓ)

## யுத்தக் கைதிகள் 29 முதல் மீண்டும் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகள் 33 பேரும் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் சாகும்வரையான உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ வானொலியான "புலிகளின் குரல்" நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டது.

இது தொடர்பாக யுத்தக் கைதிகள் 33 பேரும் ஒப்பமிட்டு, சிறிலங்கா அரசுக்கு எழுதிய கடிதத்தை நேற்று மாலை 5 மணியளவில் தாம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் கையளித்துள்ளதாக கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர். (உ-5)

## இலங்கை - இந்திய மீனவர் மோதிக் கொள்ளும் நிலை

### நடுக் கடல் சம்பவத்தில் ஒருவர் மரணம்

தலைமன்னார், ஜூலை 23

இலங்கை மீனவர்களின் வலைகளை இந்திய மீன்பிடிப் படகுகள் நாசப்படுத்தும் சம்பவங்கள் மன்னார் கடலில் அதிகரித்து வருவதை அடுத்து இலங்கை — இந்திய மீனவர்களிடையே நடுக்கடலில் மோதல் ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.

மன்னார் கடல் பிராந்தியத்துக்குள் அடுருவும் இந்திய மீன்பிடிப் படகுகளை எதிர்பார்த்து ஸ்ரீலங்கா படையினரின் தடை உத்தரவையும் மீறி இரவு நேரத்தில் நடுக்கடலுக்குச் சென்ற மீனவர்களில் ஒருவர் கடலில் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பேசாலையைச் சேர்ந்த கொன்சால் டயஸ் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அனுரா அணியில் மங்கள!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க அனுரா பண்டாரநாயக்கா அணியில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட பின்னர் அனுரா தமது ஆதரவாளர்களான சுதந்திரக் கட்சி எம். பிக்களின் கூட்டத்தில் பேசினார்.

அதில் மங்கள முனசிங்க, அனில் முனசிங்க, பேராசிரியர் கமல் கருணா நாயக்கா, ஹலிம் இஷாக், ஜினதாஸ நியதபால, மகிந்த ராஜபக்ஷ ஆகியவர்கள் உட்பட பல எம். பிக்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## எம்.பிக்கள் கட்சி மாற வழிசெய்யும் நெவிலின் பிரேரணையை எதிர்க்க ஐ.தே.க.முடிவு

கட்சி மாறும் எம். பிக்கள் பதவி இழப்பர் எனத் தெரிவிக்கும் அரசமைப்பு ஷரத்தை மாற்றுவதற்கு சுதந்திரக் கட்சி எம். பியான நெவில் பெர்னாண்டோ கொண்டு வந்திருக்கும் பிரேரணையை ஆதரிப்பதில்லை என ஆளும் ஐ. தே. க. முடிவு செய்திருக்கிறது.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத் இத்தகவலை வெளியிட்டார்.

எம். பிக்கள் கட்சி மாற வழிவகுத்தால் அது ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஐ. தே. க. வுக்கே ஆபத்தாக அமைந்து விடும் என கருதப்படுவதால் அந்தப்பிரேரணையை எதிர்க்க தமது கட்சியின் மேலிடம் முடிவு செய்தது என முக்கிய அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சிக்குள் தற்போது நிலவும் கருத்து வேற்றுமைகளை ஆலோசித்தே கட்சி இவ்வாறு முடிவு எடுத்ததாக அவர் மேலும் சொன்னார். [உ - 6]

## "திரிசங்கு" நிலையில் அனுரா அணியினர்!

கொழும்பு, ஜூலை 23

எம்.பிக்கள் கட்சி மாறுவதற்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தத்தை எதிர்ப்பது என ஆளும் ஐ. தே. க. முடிவு செய்திருப்பது அனுரா பக்கம் உள்ள — சுதந்திரக் கட்சி அதிருப்தியாளர் அணி — எம்.பிக்களை "திரிசங்கு" நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

மேற்படி சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படாவிட்டால்—

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் காரணம் காட்டி கட்சித் தலைமைப் பீடத்தால் வெளியேற்றப்படும் எம்.பிக்கள், தமது பதவிகளை இழக்க வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

அனுரா அணியில் உள்ள எம்.பிக்களும் இத்தகைய சிக்கலை தாம் எதிர்நோக்க வேண்டிவரும் எனத் தற்போது அஞ்சுகின்றனர்.

இன்று அனுரா அணியினரின் பொதுக்கூட்டம் ஒன்று பாணந்துறையில் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது அக்கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என அனுரா பண்டாரநாயக்கா இறுதி நேரத்தில் முடிவு எடுத்துள்ளார். ஆனால் இக்கூட்டம் திட்டமிட்டபடி நடக்கும் என நெவில் பெர்னாண்டோ அறிவித்துள்ளார். (உ)

## நாடு துண்டாவதைத் தடுக்கவும் புலிகளை அடக்கவும் முடியாது

### முன்னாள் விமானப்படை தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 23

இராணுவத்திற்கு வழங்கப்படும் குறைந்தளவு நிதியைக் கொண்டு பலம் வாய்ந்த விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்குவது என்பது முடியாத காரியம் என்றும்—

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வுகள் மேற்கொள்ளப்படாதவரையில் நாடு துண்டாடப்படுவது தவிர்க்கப்பட முடியாத ஒன்று எனவும் விமானப்படையின் முன்னாள் தளபதி ஹரி குணதிலகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையில்—

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து பொருளாதார ரீதியில் அரசாங்கத்துக்கு வருமானம் ஏதும் வருவது இல்லை என்றும்—

அரசின் பொருளாதாரத் திட்டத்திலும் இப்பகுதி இடம்பெறுவது இல்லை என்றும் அரசியல் ஆய்வு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதேவேளை—

எந்த ஒரு இராணுவத்தினாலும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க இயலாது என்று ஈ. பி. ஆர். எல். எவ். [நாபா பிரிவு] பிரமுகர் அபு யூசுப் கூறினார். [உ-எ]

## 'குமணை' நேற்று வந்தது; தபால்கள் வரவில்லை

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமண' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பருத்தித்துறைக்குச் சென்று பொருள்களை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றார். பொருள்களை இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பமாகின.

இந்தக் கப்பலில் யாழ். செயலகத்துக்கு ஆயிரத்து 800 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களும் மற்றும் தனியார் துறையினருக்கான ஆயிரத்து 400 மெற்றிக் தொன் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

தபால் பொதிகள் எதுவும் 'குமண' கப்பலில் எடுத்து வரப்படவில்லை. (ஒ-5)

## இளவாலையில் புலிகள் படை மீது ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

இளவாலை ஒட்டகப்புலத்தில் அமைந்துள்ள இராணுவக் காவலரணின் உட்புறத்தில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் அணிவகுப்பில் ஈடுபட்டிருந்த சுமார் முப்பது இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் படையினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

இதேசமயம்—

பத்தமேனிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் காவலரண்கள் மீதும் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். அதனையடுத்து இராணுவத்தினரும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். (ஓ-5)

## ஜனாதிபதி இடம் பெயர் சேவை: மட்டு. நகருக்கு விஜேதுங்க: தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 23

இன்று ஆரம்பமாகும் ஜனாதிபதி இடம்பெயர் சேவையைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்கா இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்கின்றார்.

[illegible] பொலீஸாரும் இராணுவத்தினரும் மட்டக்களப்பு நகரில் குவிக்கப் பட்டுள்ளனர்.

படையினர் வீதிகள் எங்கும் நிறைந்து காணப்படுகின்றனர், கட்டடங்களின் கூரைகளில் இருந்து சிப்பாய்கள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

[illegible] சாவடிகளில் [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் நிறுத்தம்: மடு அகதிகள் பேரணி

யாழ்ப்பாணம், ஜூலை 23

வவுனியாவில் இருந்து இடம்பெயர்ந்து மடுவில் தங்கியுள்ள தமிழ்மக்கள் நேற்று அங்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து மடு அகதிமுகாமில் தங்கியுள்ள சுமார் 6 ஆயிரம்

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ. சங்கம்

## வாக்காளர் பட்டியல் 30-06-1993 வரை

எமது சங்கத்தின் 30-6-1993 வரையிலான வாக்காளர் பட்டியல்கள் பின்வரும் கிளைகளில் 21-7-1993 தொடக்கம் 31-7-1993 வரை அங்கத்தவர்களின் பார்வைக்காக வைக்கப்படும். இதில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் 1-8-1993 தொடக்கம் 10-8-1993 திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ "செயலாளர், புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ. சங்கம் 201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விவரம்:**

கிளை இல. 1, 2, 6, 7, 12, 13, 14, 15, 16,
ஜும்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை இல. 3, 5,
இல. 15, சிறாம்பியடி வீதி, மணியங்கட்டடம்,
யாழ்ப்பாணம்.

கிளை இல. 9,
இல. 147, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை இல. 10.
இல. 174, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை இல. 19, 20
இல. 201/1, 3ஆம் குறுக்குத் தெரு,
தலைமைக்காரியாலயம், யாழ்ப்பாணம்.

செயலாளர் தலைவர்

(சி-5506)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 06 — 1940

மறைவு: 23 — 07 — 1985

திருமதி
### லூட்ஸ்மார்கிறெட் றோஸ் தேவதாஸ்
(சறோஜினி)

ஆண்டுகள் எட்டோடி ஐயகோ மறைந்ததுவோ
அன்பொழுகப் பேசிய உன் அரியா நா நின்றதுவோ
மங்கலமாய் அணிந்த குங்குமப் பொட்டிழந்து
எங்கே நீ சென்றுவிட்டாய் ஏங்கியே தவிக்கின்றோமே!

அன்னையே உன் நினைவு என்றுமே மறைவதில்லை
கண்களின் இமைபோலக் கவனமாய் வளர்த்தாயம்மா
மின்னல்போல் மறைந்தாய் அந்தோ விதி செய்த-
சதியோ அம்மா!
முன்னர்போல் நாம் எப்போது இணைவது-
சொல்வீரம்மா!

என்றும் உம் நினைவலைகள் எம்மிடம் ஓய்வதில்லை
கன்றுகள் போல நாங்கள் கதறுதல் நிற்பதில்லை
வென்றுமே சென்ற காலன் விடுவதும் இல்லை இங்கே
அங்கு நாம் வரும் வரைக்கும் அம்மாவே-
காத்திருப்பாய்!

அன்புக் கணவன், பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்கள்.

466/2பீ, யுனானியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (26625)

## கௌரவிப்பு

வண். கிழக்கு கலட்டி: எச்சாட்டி மகாமாரி அம்பாள் ஆலய மஹோற்சவ 15 தினங்களும் கந்த புராண தெய்வீகச் சொற்பொழிவாற்றிய
"சிவஞான பானு" "சித்தாந்த வித்தகர்"
"கலைமாமணி"

### சாம் - சோமாஸ்கந்தசர்மா

23-7-93 வெள்ளி மாலை 7 மணியளவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவிருக்கிறார்.

சிறப்பு நிகழ்ச்சியாக இரவு 7-30 மணிக்கு ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின்

**'வள்ளி திருமணம்'**

வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

அனைவரையும் அழைக்கிறோம்.

இடைக்கால நிர்வாக சபையினர்.

(26682)

அருள் மிகு
தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி
(முருகமூர்த்தி) கோவில்

## ஸ்ரீமுக வருட (1993) மஹோற்சவம்

முக்கிய நிகழ்ச்சிகள்

நாளை 24 - 07 - 1993 — நண்பகல் 12-00 மணி கொடியேற்றம்
01 - 08 - 1993 — காலை 9-00 மணி தேர்ப்பவனி
நண்பகல் 12-00 மணி சண்முகார்ச்சனை
02 - 08 - 1993 — காலை 9-15 மணி தீர்த்தவாரி
03 - 08 - 1993 — மாலை 5-30 மணி திருக்கல்யாணம்

இலக்கியப் பேருரை:

### மகாபாரதம்

நிகழ்த்துபவர்:
கந்தநிதி த. சிவகுமாரன்
(ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி, அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்.)

தினசரி மாலை 7-45 — 8-45 மணி வரை
அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- ஆலய நிருவாகம்.

தாவடி, கொக்குவில். (26630)

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம் பழைய மாணவர் சங்கம்

13-07-1993 உதயனில் வெளியான விளம்பரத்திற்கமைய, 25-07-1993 ஆம் திகதி (ஞாயிறு) நியமனப்பத்திரங்களையும், விவரங்களையும் அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சேது விபுலானந்தா
செயலாளர்

கந்தரோடை,
சுன்னாகம். (6603)

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது சக மாணவன் செல்வன்
கா. மனோரஞ்சனின் [குலாபி] தந்தையார்

### அமரர் K. காமாட்சிசுந்தரம்

அவர்களுக்கு எமது கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.

1 ஆம் வருட மாணவர்கள்
யாழ். மருத்துவ பீடம்.
[26645]

உ
ஓம் விராட் விஸ்வம் பிரம்மனே நம:
சாவகச்சேரி • சங்கத்தானை

### அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம்

## ஆடிப்பூர நன்னாள் மங்கல நீராட்டு வைபவமும் மஹாயாக விழாவும்

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு
ஆடித் திங்கள் 8ஆம் நாள்

**23-07-1993 வெள்ளிக்கிழமை**

அதிகாலை முதல் நடைபெறவுள்ளது.
அவ்வேளை
ஆடிப்பூர விழாவும், பாதகாணிக்கை செலுத்துதலும்
நண்பகல்
மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.
இரவு
ஆலயச் சுற்றாடலில் வதியும் இளைஞர்களின்

**"காத்தவராயன்"**
(சிந்துநடை புராண நாடகம்)

- அடியார்கள் மேற்படி தெய்வீக விழாவில் கலந்து எல்லாம் வல்ல மீனாட்சி அம்பாளின் திருக்கடாட்சத்தினை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையும்,
அம்பாள் அடியார்களும்,
ஆடிப்பூர விழா உபயகாரர்களும்.

குறிப்பு: இன்று (23 - 07 - 1993) நடைபெற இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 10 - 09 - 1993க்கு பிற்போடப்பட்டுள்ளது.

ஐ. கோ. சந்திரசேகரம்,
தலைவர்,
மேற்படி ஆலய பரிபாலன சபை.

சங்கத்தானை,
சாவகச்சேரி. (26628)

## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி.

1) கரப்பந்தாட்டம் - 4 நபர் Over Game
2) கரப்பந்தாட்டம் - 6 நபர் Over Game
3) புதிய முறையிலான கரப்பந்தாட்டம் (Set-up - ஆண்கள்)
4) புதிய முறையிலான கரப்பந்தாட்டம் (Set-up - பெண்கள்)

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 5-8-1993க்கு முன்னர் கடிதமூலமாகவோ அல்லது நேரடியாகவோ செயலாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

இப்படிக்கு:
மத்திய விளையாட்டுக் கழகம்.
ஆவரங்கால்.

செயலாளர் முகவரி;
ப. புவேந்திர குமார்,
சாமிவீதி,
ஆவரங்கால். புத்தூர். (6369)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 03 — 1963

மறைவு: 23 — 06 — 1993

அமரர்
### செல்வி நாகமுத்து யோகேஸ்வரி
(குடும்பநல உத்தியோகத்தர்)

அன்பின் திருவுருவாய், எல்லோர்க்கும் இனியவராய், பண்பின் ஒளிச்சுடராய் வாழ்ந்த எம்மை பாதியில் விட்டுச் சென்ற உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதரர்கள்,
மாமன்மார்கள், சித்திமார்கள்.

கைதடி கிழக்கு,
கைதடி. (6372)

### நல்லூர் பிரதேச சபை-திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் — 1993

கீழ்க்காணும் இறைச்சிக் கடைக்கு 1993 ஆகஸ்ட் 1ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்கு என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் யாவும் கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 29-7-1993 நண்பகல் 12மணி வரை விநியோகிக்கப்படும். கேள்விகள் யாவும் 30-7-1993 நண்பகல் 12மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| குத்தகையின் தன்மை | கே. ப. பணம் | கே. வை. பணம் | ஆகக் குறைந்த மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| ஆடிய பாதம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | ரூ. 200/- | ரூ. 1000/- | ரூ. 11,250/- |

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
தலைமையகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 22-7-1993 (6-6502)

## மிட்லண்ட் வீடியோ
சாவகச்சேரி

எமது
புதிய வெளியீடு
பிரபு—குஷ்பு
கவுண்டமணி
செந்தில்
நடித்த
**தர்மசீலன்**
(ஒரிஜினல்)
(26644)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய

# கிராமங்களின் வளங்களை பயன்படுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

அடுத்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் கிராமிய வளங்களைப் பயன்படுத்தி கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்படுத்தக் கூடிய திட்டங்கள் பற்றிய அறிக்கையை தயாரிக்குமாறு உதவி அரச அதிபர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் தலைமையில் செயலகத்தில் கடந்த செவ்வாய் நடைபெற்ற விசேட கூட்டத்தில் வைத்து இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

உதவிஅரசாங்க அதிபர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் செயலக அதிகாரிகள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க வசதியாகவே இந்த முன்னேற்பாட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது

(த-5)

## 4 அச்சுவேலி இளைஞர்கள் கொழும்பில் தடுத்து வைப்பு!

கொழும்பு, ஜூலை 23

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்கள் கடந்த மாதம் 7ஆம் திகதி கொட்டாஞ்சேனையில் உள்ள லொட்ஜ் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டு 6ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பு தமிழ் வார இதழ், செய்தி வெளியிட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவரான சின்னத்துரை நிலாவண்ணன் மற்றும் புவிலிங்கம் சுகுணேஸ்வரன், செல்வராஜா ஸ்ரீஸ்வரன், கிருஷ்ணராஜா விமலேந்திரன் ஆகியோரே அங்கு தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். [த-5)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் வரலாறு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரம மண்டபத்தில் திரு. ஆறுமுகம் கந்தையா ஜே. பி. தலைமையில் நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, தவத்திரு. சுவாமி சித்ரூபானந்தா, தவத்திரு. ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் பரிசில்களை வழங்குவார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் நூல் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

(ச)

## ஆலய உற்சவங்கள்

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று (வெள்ளி) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் உற்சவ காலத்தில் தினமும் 7-15க்கு கந்தபுராண தொடர் விரிவுரையாற்றுவார். (த-8)

o o o

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை முதல் 21 தினங்கள் ஏகவிம்சதின இலட்சார்ச்சனை நடைபெறும். ஆகஸ்ட் 12ஆம் திகதி சங்காபிஷேகமும் தினமும் பகல் 11 மணிக்கு அறிஞர்களின் சொற்பொழிவுகளும் பிற்பகல் 1 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும். (க)

o o o

பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் ஆலய ஸ்ரீ பார்வதவர்த்தனி அம்மன் தீர்த்தோற்சவம் இன்று வெள்ளி நடைபெறும். (க-109)

o o o

மீசாலை தெற்கு சித்திர வேலாயுதர் ஆலய மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும், 1008 சங்காபிஷேகமும் இன்று வெள்ளி நடைபெறும். (க-15-117)

o o o

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் இன்று வெள்ளி மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஜூலை 31ஆம் திகதி இரவு தேவநற்கருணை ஆராதனையும், திருப்பலியும் இடம்பெற்று ஆகஸ்ட் முதலாம் திகதி திருநாட்பலி பூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை சாவகச்சேரி பங்குத் தந்தை அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள் நடத்துவார். (க-117)

o o o

சாவகச்சேரி வாரிவனநாத சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் 1008 சங்காபிஷேகமும் இன்று வெள்ளி காலை பத்து மணிக்கு நடைபெறும். (க-117)

o o o

சண்டிலிப்பாய் அங்கணாக்கடவை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். அடுத்த மாதம் 1ஆம் திகதி தேர் உற்சவமும், 2ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க-30)

o o o

அளவெட்டி தெற்கு வயல்வெளி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளி காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும். (க-13)

o o o

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய இலட்சார்ச்சனை சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து அடுத்தமாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை பௌர்ணமி தினத்தன்று நிறைவெய்தும்.

இதனை ஒட்டி தினமும் பி. ப. 6 00 மணியிலிருந்து 7-00 மணி வரை யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. த. சிவகுமாரன் அவர்களால் ''தேவி மகாத்மியம்'' எனும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்படும். (க-69)

o o o

ஏழாலை மேற்கு மடாலய பிள்ளையார் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை பகல் 12 மணிக்கு திருமுறை விழா குருபூசையும, விசேட அபிஷேகமும் நடைபெறும். மாலை 4-30 மணிக்கு ''விநாயகர் விழா''வும் பெரிய புராண படனமும் நடைபெறும். (க-45)

o o o

பணிப்புலம் காலையடி கதிர்வேலாயுதர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும். அன்று பிற்பகல் 4 மணிக்கு திரு. ச. அழகரத்தினம் எழுதிய ''கந்தரநுபூதி நுழைவாயில்'' நூல் வெளியீட்டு வைபவமும் இடம்பெறும். (க-28)

o o o

எழுதுமட்டுவாழ் விழுபனை ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

ஆகஸ்ட் முதலாம் திகதி தேர் உற்சவமும், இரண்டாம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-117)

o o o

வல்லை ஆதி வைரவர் வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும். (க-155)

o o o

சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோயில் மகோற்சவம் இன்று வெள்ளி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா ஆகஸ்ட் 1ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 2ஆம் திகதியும் இடம்பெறும். (க)

o o o

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும். தீர்த்தத் திருவிழா அடுத்த மாதம் 2ஆம் திகதி இடம்பெறும். (க)


அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய

வருடாந்த மஹோற்சவம் - 1993

| | | | |
|---|---|---|---|
| 24 - 7 - 1993 | சனிக்கிழமை | காலை 8 50மணி | கொடியேற்றம் |
| 31 - 7 - 1993 | சனிக்கிழமை | மாலை 6-00மணி | சப்பறம் |
| 1 - 8 - 1993 | ஞாயிற்றுக்கிழமை | காலை 9 00மணி | தேர் |
| 2 - 8 - 1993 | திங்கட்கிழமை | காலை 9-00மணி | தீர்த்தம் |

மங்கள வாத்தியம்:

மறைந்த கோவிந்தசாமியின் புதல்வர்கள் (இணுவில்)

தினமும் இரவு 7-00 மணிமுதல் 8 - 00 மணிவரை

"பெரியபுராண தொடர் விரிவுரை"

நிகழ்த்துபவர்: திரு. க. மாசிலாமணி B. A.

அடியார்கள் அனைவரும் விநாயகப் பெருமானைத் தரிசித்து, பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யவும்.

அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய
அறங்காவலர் சபை.

(6362)





உயர்திரு

முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி

அவர்களின்

8ஆம் ஆண்டு

குருபூசை விழா

நாளை மறுதினம் 25 — 7 — 1993 ஞாயிற்றுக்கிழமை

செல்வச் சந்நிதியில் அமைந்திருக்கும்

சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையில் குருபூசை தினத்தையொட்டி நடைபெற்ற சைவ சமய அறிவுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும்
பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்
சி. முருகேசபிள்ளை அவர்கள்
பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிப்பார்.

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம
சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்
சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும். அன்பர்கள், அடியார்கள் கலந்து இத் தினத்தை சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி,
செ. மோகனதாஸ்.

(26613)



உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம:

கன்னாதிட்டி

அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

ஸ்ரீமுக வருட (1993ஆம் ஆண்டு)

மஹோற்சவ விஞ்ஞாபனம்

23 — 7 — 1993 வெள்ளி பகல் 10 மணி — ஆடிப்பூரம்
24 — 7 — 1993 சனி பகல் 10-35 மணி — கொடியேற்றம்
31 — 7 — 1993 சனி மாலை 4மணி — சப்பறம்
1 — 8 — 1993 ஞாயிறு காலை 9மணி தேர்
2 — 8 — 1993 திங்கள் காலை 8மணி தீர்த்தம்
3 — 8 — 1993 செவ்வாய் மாலை 4மணி — பூங்காவனம்

(26626) — தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### பசுமாடு விற்பனை

எமது பண்ணையில் உள்ள பிறிசியன் இனபசு (இல. 8) விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் பார்வையிட்டு 30 - 07 - 93க்கு முன்னர் கூறுவிலை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம். (சி-5500)

### எருது விற்பனை

எமது பண்ணையில் எருது விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் பார்வையிட்டு 30 - 07 - 93ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-5499)

### தேவை

அப்பம் தயாரிப்பதில் நன்கு அனுபவம் உள்ளவர் உடன் தேவை. நேரில் வரவும்: டவர் கோம்பியார், வெலிங்டன் முன்பாக, யாழ்ப்பாணம். (சி-5498)

### ஆண்டு - 5 பரீட்சை

எம்மால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை நாளை சனிக்கிழமை 24-7-93 பி. ப. 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெறவிரும்புவோர் பதிவு செய்யவும்; எடிசன் அக்கடமி, யாழ். இந்துக் கல்லூரி அருகில் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6370)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் அடுத்த வினாத்தாள் 25 - 07 - 1993 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26598)

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மக்கிலன் புத்தகசாலை- யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, பளிங்கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6866)

### எழுதுவினைஞர் தேவை

எமது கல்வி நிலையத்துக்கு பெண் எழுதுவினைஞர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். 23-07-93 வெள்ளி காலை 10 மணிக்கு நேரில் வரவும். சிவாமி கல்வி நிலையம், மீன் வீதி, சாவகச்சேரி. (சி-5608)

### ஆண்டு - 4 பரீட்சை

ஆண்டு - 4 புலமைப் பரிசில் மாணவருக்கு எம்மால் நடத்தப்படும் வாராந்த பயிற்சித் தொடரின் இரண்டாவது பரீட்சை நாளை சனிக்கிழமை 24 - 7 - 93 பி. ப. 3 மணிக்கு இடம்பெறும். வினாத்தாள் பெற விரும்புவோர் பதிவு செய்யவும்; எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (6371)

### ஆண்டு - 4

எமது நிறுவனத்தில் கல்வி பயில விரும்பும் புலமைப் பரிசில் பரீட்சை (1994) மாணவர்களுக்கு அடிப்படையில் இருந்து கல்வி கற்பிக்கப்படவுள்ளது. விரும்புவோர் உடன் பதிவு செய்யவும். பரீட்சை 07-08-1993 சனி மு. ப. 8-00, மு. ப. 11 00 நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26594)

### ஆனந்தம்

சியாக்காய்ப் பவுடர் சித்த மருத்துவ முறைப்படி சியாக்காய், பயறு, வெந்தயம் உட்பட மூலிகைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. கண் குளிர்ச்சி, கூந்தல் வளர்ச்சி சுகமான வாழ்வுக்கு ஆனந்தம் சியாக்காய்ப் பவுடர் பாவியுங்கள். மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடங்கள்: ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம், கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-5612)

## சேவைநலன் பாராட்டு விழா

குருநகர், ஜூலை 23

சில்லாலை - புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையாகக் கடமையாற்றி மாற்றம் பெற்றுச் செல்லும் அருட்திரு மரிய நாயகம் மேரி வேஜில் அமுதகுமார் அடிகளாருக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சில்லாலை பங்கு மக்களால் சேவைநலம் பாராட்டு நடத்தப்பட இருக்கிறது. (உ-5


## UNIKCO COMPUTER CENTRE

BASIC Language
Pascal Language
d BASE III Plus and MS - DOS
Lotus 1-2-3- and MS - DOS
Word Processing
(Word Star Rel 5 5) and MS - DOS

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

வார இறுதி வகுப்புக்கள்: 24 - 7 - 1993
வார நாள் வகுப்புக்கள்: 26 - 7 - 1993




மேலதிக விபரங்களுக்கு;

37, Clock Tower Road, JAFFNA.

(வெளி 'டன் சந்திக்கு அருகில்)

(சி-5610)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## வினாசித்தம்பி நாகலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

**தவப்பேறு: 03 – 07 – 1914**
**சிவப்பேறு: 23 – 06 – 1993**

திதி: ஆனி அபரபட்ச சதுர்த்தி

தங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## அமரர் வி. நாகலிங்கம் ஆற்றிய கல்விச் சாதனைகள்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் அராலிப் பெரியோர்களாலும் இளைஞர்களாலும் ஆசிரியர்களாலும் ஆரம்பிக்கப்பட்ட அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை இடைக்காலத்தில் சில இடையூறுகளை எதிர்நோக்கிய வேளையில் 1954ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் திகதி திரு வி. நாகலிங்கம் அதிபராக நியமிக்கப்பட்டார்.

அவர் உடனே பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை உருவாக்கி பாடசாலையில் உள்ளூர் ஆசிரியர்களை நியமிக்க வழி வகுத்து பாடசாலைக்குப் புத்துயிர் கொடுத்தார்.

அவருடைய விடா முயற்சியால் ஓலைக் கொட்டிலாக இருந்த மண்டபம் அரசாங்க உதவியுடன் நிரந்தரக் கட்டடமாக மாறியது. மேலும், கட்டட வசதிக் குறைவை நீக்க அவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை நாடி இரண்டாவது மண்டபத்தையும் களஞ்சிய அறையையும் கட்டுவித்தார். அத்துடன் அயலிலுள்ள நிலங்களை நன்கொடையாகப் பெற்று இடவசதியும் உருவாக்கினார்.

அமரர் நாகலிங்கம் அளித்த ஊக்கத்தால் 5ஆம் வகுப்பிலிருந்து படிப்படியாக பாடசாலை க. பொ. த. (சாதாரண) வகுப்பு வரை உயர்த்தப்பட்டு 1961இல் முதன் முதலாக மாணவர்கள் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றி சித்தியும் அடைந்தார்கள். 1969 ஆம் ஆண்டுவரை க. பொ. த. (சாதாரண) வகுப்பு நடைபெற்று மாணவர்கள் தராதரப் பத்திரம் பெற்று அரசாங்க நியமனம் பெற்றுள்ளார்கள்.

சிறந்த நிர்வாகியான திரு. வி. நாகலிங்கம் தமிழ்ப் பாஷை, தமிழ் இலக்கியம், இசை, கிராமிய நடனம், நாடகம், பண்ணிசை ஆகியவற்றில் திறமை பெற்ற சகலகலா வல்லுநர். அவர் தமக்குக் கீழ் கற்பித்த ஆசிரியர்களின் திறமைகளை அறிந்து ஊக்கமளித்து மாணவர்கள் சகல வட்டார, மாவட்டப் போட்டிகளிலும் வெற்றி பெறுவதற்கு வழி வகுத்தார்.

அவரது சேவைக் காலத்தில் அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை வட்டுக்கோட்டை வட்டாரத்திலேயே கல்வி, இசை, நடனம், நாடகம், உடற்பயிற்சி என்பவற்றில் வெற்றியீட்டி முன்னணி வகித்து வந்தது.

கல்விப் பகுதியில் அதிபர் நாகலிங்கம் என்றால் முருகமூர்த்தி வித்தியாசாலை, முருகமூர்த்தி வித்தியாசாலை என்றால் அதிபர் நாகலிங்கம் என்று நினைக்கும் உன்னத நிலைமை தோன்றியது.

அமரர் நாகலிங்கம் ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கும் காரணமாக அமைந்த சிறப்பான அதிபர் ஆவார்.

அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

திருமதி த. பரமேஸ்வரி,
அதிபர் தரம் - I
அராலி கிழக்கு, அ. மி. த. க. பாடசாலை.

## சிந்தாமணி விநாயகரை தினமும் வழிபட்ட பக்தர்

இளைப்பாறிய அதிபர் அமரர் திரு. வினாசித்தம்பி நாகலிங்கம் சந்ததியே பக்தியில் ஊறியது.

அமரர் நாகலிங்கம் எமது அராலி சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் தேவாரம், திருவாசகம் படிப்பதோடு பிள்ளையார் பக்திப் பாடல்களையும் மனம் உருகப் படிப்பார். அவர் எமது ஆலயத்தில் புராணபடனம் சில காலமாக நடைபெறாத குறையை நீக்கி பெரியபுராண திருவிளையாடற் புராண படனங்களைப் பலமுறை நடத்தினார்.

அமரர் நாகலிங்கம் நித்திய நைமித்திய நிகழ்ச்சிகளிலும் திருப்பணிகளிலும் கலந்துகொண்டு தமது பிள்ளைகளையும் ஊக்கப்படுத்தி தாமும் கலந்து கொள்வார்.

அராலி தெற்கு ஆலயங்களில் அமரர் நாகலிங்கத்தின் கந்தபுராண, திருச்செந்தூர் புராண, திருவாதவூரடிகள் புராண படனங்கள் நடைபெற்றன. அவர் தன் பக்திக் கடமையை வயது முதிர்ந்த நிலைமையிலும் நிறைவேற்றினார்.

அவருடைய பண்ணிசை உள்ளத்தை உருக்க வல்லது. அவர் ஆனிமக நட்சத்திரத்தன்று திருவாசக முற்றோதலைத் தொடக்கி சிறப்புற நடத்துவார்.

புராண விளக்கம், பண்ணிசை ஆகியவற்றில் வித்தன்னரான அமரர் நாகலிங்கம் எம்மை விட்டுப் பிரிந்த துயரைத் தாங்கி அமைதி பெறுவோமாக!

ஓம் சாந்தி!

வெ. குகசாமிக் குருக்கள்,
அராலி சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலகரும், பிரதம குருவும்.

(சி-5492)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பத்தாண்டு கடந்து ஜூலை 23

இன்று ஜூலை இருபத்து மூன்றாம் நாள். ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் அழியா இடம்பெற்ற நாள்.

தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். ஆகையால் அவர்களை இராணுவ வல்லாண்மை கொண்டு அடக்கி ஆளலாம். அடிமைப்படுத்தி வைத்திருக்கலாம். —இவ்வாறு கற்பனை செய்து கொண்டிருந்த சிங்கள பௌத்த பேரின வாதத்தின் — ஸ்ரீலங்கா அரசின் — கனவு கலைந்து போன நாள்.

ஈழத்தமிழர்கள் அகிம்சை வழிகளில் தமது உரிமைகளுக்காகப் போராடிச் சலித்துப் போனார்கள். அகிம்சைக்கும் நியாயத்துக்கும் மதிப்பளிக்காத, பொருட்படுத்தாத சிறுமைக் குணம் கொண்டவர்கள் சிங்களவர்கள். எனவே அவர்களது இராணுவ அடக்கு முறைக்கு, இராணுவத் தாக்குதல்கள் மூலம் தான் பதிலடி கொடுக்க வேண்டும். இல்லையேல் தமிழர்களை அவர்கள் மிக விரைவில் அழித்து விடுவார்கள் என்பதை உணர்ந்து அதற்குச் செயலுரு கொடுத்த வீறு கொண்ட வீரத்தமிழ் இளைஞர்களின் சாதனைமிகு நாள்.

தமிழர் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துக்குப் போட்டியாக ஓர் இராணுவம் தளிர் கொள்ளும் என்பதை உலகுக்கு வெளிக்காட்டியது திருநெல்வேலித் தாக்குதல். அப்போது கரந்தடிப்படையாக இருந்த தமிழர் இராணுவம், மரபுவழி இராணுவமான ஸ்ரீலங்கா படையுடன் சரிநிகராக நின்று ஆனையிறவில் போராடும் அளவுக்கு வளர்ந்து விட்டதை முழு அகிலமுமே ஒப்புக் கொண்டுள்ளது.

கடந்த பத்து வருடங்களில் தமிழர் போராட்டம், தமக்கென ஓர் இராணுவத்தை வளர்த்தெடுத்து, ஸ்ரீலங்கா அரச இராணுவத்தை எதிர்த்து நின்று போராடவும், அதன் மூலம் தமிழர் பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசின் ஆணையை செல்லுபடியற்றதாகவும் ஆக்க வல்ல நிலையை அடைந்திருக்கிறது என்பது யதார்த்தம். இலங்கையில் இரண்டு நாடுகள் இரண்டு இராணுவங்கள் என்பது உண்மை நிலை.

1983 ஜூலை 23ஆம் நாளது திருநெல்வேலித் தாக்குதல் தென்னிலங்கையில் கறுப்பு ஜூலை ஒன்றை உருவாக்குவதற்குக் காலாக இருந்தது என்பது உண்மை. ஆனால் கறுப்பு ஜூலை சிங்கள அரசு, அரசியல் தலைவர்கள், இராணுவம் ஆகிய முத்தரப்பினரது உண்மையான குணாம்சங்களையும், வெறித் தன்மையையும், தமிழர்களை எந்த நிலையில் வைத்திருக்க விரும்பினார்கள் என்பதையும் உலகத்துக்கு வெளிச்சப்படுத்தியது. அவர்களின் கீழ்த்தனத்தைப் படம் பிடித்துக் காட்டியது.

கறுப்பு ஜூலையின்போது தமிழர் இன அழிப்பும் உடைமை அழிப்பும், சூறையாடுதலும், மிகப் பயங்கரமாக இருந்தன. அதனால் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், நஷ்டங்கள், நலிவுகள் எழுத்தால் அளக்கவும் வர்ணிக்கவும் முடியாதவை.

எனினும் அவை தமிழர் நெஞ்சங்களில் தமது இறைமையை மீள்வித்து, தமது தேசத்தை மீட்டெடுத்து சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற மன உணர்வை வலிமைப்படுத்தின என்பதை மறந்துவிடலாகாது.

தமிழர்களின் அபிலாசைகளையும், உணர்வுகளையும் சுதந்திரமாக வாழும் உரிமையையும் பத்து வருடங்கள் கடந்தும் சிங்களத் தலைவர்களும், மக்களும் அங்கீகரிக்க மறுக்கிறார்கள். ஒரு சென்றிமீற்றர்தானும் நகருகிறார்கள் இல்லை.

ஆனால் தமிழர் போராட்டம் பத்து வருடங்களில் பல படிகளைத் தாண்டி, சுதந்திரத்துக்கு அண்மித்ததான புதிய பரிமாணத்தைப் பெற்றிருக்கிறது என்பது குறுகிய காலத்திலான ஒருவகைச் சாதனையே!

---

வன்செயல்களினால்.

## பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு வழங்க மேலும் ரூ.10 கோடி

வன்செயல்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளைத் தொடர்ந்து வழங்குவதற்கென பத்துக் கோடி ரூபா பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான குறை நிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க அதிபர்களின் அறிக்கைகளின்படி இழப்பீட்டை வழங்குவதற்கு மொத்தம் 38 கோடி ரூபா தேவைப்படுவதாகவும் —

இவ்வாண்டு வழங்குவதற்கு எட்டுக் கோடி ரூபாவும் —

பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களின் இழப்பீட்டுக் கோரிக்கைகளை வழங்குவதற்கு இரண்டு கோடி ரூபா தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

1989 ஆம் ஆண்டு ஜனவரி முதல் திகதிக்குப் பின் தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளோருக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தின் அல்லது கோட்டக் கல்வி அலுவலகத்தின் எழுத்து மூலமான அங்கீகாரத்துடன் மேற்படி காலப்பகுதிக்குப் பின் தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் பெற்று சேவையாற்றியவர்கள் தமது அங்கீகாரக் கடிதத்துடன் எதிர்வரும் திங்களன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பாக யாழ். கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர் நிர்வாகக் கிளைக்கு சமுகமளிக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தமக்குரிய அங்கீகாரக் கடிதத்தை தவறவிட்டவர்கள் தாம் கடமையாற்றும் பாடசாலை அதிபரிடமிருந்து சேவை விவரத்தைப் பெற்று சம்பந்தப்பட்ட கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரின் அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமைக்குப் பின் மேற்படி பயிலுநர் ஆசிரிய நியமனம் தொடர்பாக எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. [உ-5]

## இன்று ஆடிப்பூரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆடிப் பூரத் தினம் இன்றாகும். இதனை ஒட்டி யாழ். குடாநாட்டில் உள்ள ஆலயங்கள் பலவற்றில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெறும்.

பின்வரும் ஆலயங்களில் ஆடிப்பூரத் திருவிழா விசேட பூசை, அபிசேகங்களுடன் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில், தொல்புரம் கொட்டடியம்பதி மாரிமுத்து அம்மாள் கோவில், சிரணி நாகபூசணி அம்பாள் கோவில், நவாலி களைஓடை கண்ணகை அம்மன் கோவில் திருநெல்வேலி அரசடி சிவகாமசுந்தரி அம்மன் கோவில், வண்ணை பேச்சியம்பாள் கோவில், உரும்பராய் பேச்சியம்மன் கோவில், அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் கோவில், அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் கோவில், சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி கோவில், வழக்கம்பரை அம்மன் கோவில், யாழ் கச்சேரி - நல்லூர் வீதி நாச்சியம்பாள் ஆலயம், கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயம். (க)

3 தினங்களாக கடும் மழை

## நூற்றுக்கணக்கானோர் வெள்ளத்துக்குப் பலி

புதுடில்லி, ஜூலை 23

வட இந்திய நகரங்களிலும் நேபாளத்திலும், பங்களாதேஷிலும் கடந்த மூன்று தினங்களாகப் பெய்துவரும் கடும் மழையால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவுக்கு தெற்கே வெள்ளத்துக்குப் பலியான நூறு பேரின் சடலங்கள் வரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

வடமேற்கு இந்தியாவில் கடந்த மூன்று தினங்களில் 500க்கும் அதிகமானோர் வெள்ளத்தில் சிக்கி மரணமாகி உள்ளனர். பங்களாதேஷில் 46 பேர் வரை இறந்துள்ளனர். (இ-6)

பிரேமா கொலை:

## முதலாவது சந்தேக நபரின் உயிருக்கு ஆபத்தாம்!

கொழும்பு, ஜூலை 23

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொலையில் முதலாவது சந்தேக நபரான சமன் சுஜீதாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் அவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ளது.

சமன் சுஜீதாவின் வழக்கறிஞரான ஜோசப் சார்ள்ஸ் கொழும்பு மேலதிக நீதிவான் சம்பிகா புத்திரபால முன்னிலையில் தாக்கல் செய்த மனு ஒன்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது இது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சி. ஐ டி. யினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபரான சமன் சுஜீதாவை வேறு இடத்துக்கு மாற்றும் பட்சத்தில் அவருக்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று வழக்கறிஞர் ஜோசப் சார்ள்ஸ் கேட்டுக் கொண்டார்.

காலஞ் சென்ற ஜனாதிபதி பிரேமதாச முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ன ஆகியோருக்கே பொலீஸாரினால் பாதுகாப்பு வழங்க முடியவில்லை. முதலாவது சந்தேக நபருக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதை நம்ப முடியுமா என்றும் சட்டத்தரணி ஜோசப் சார்ள்ஸ் நீதிமன்றத்தில் பலத்த சிரிப்புக்கு மத்தியில் கேட்டார்.

முதலாவது சந்தேக நபரான சமன் சுஜீதாவின் கொழும்பு-12 டயஸ்பிளேஸ் இல்லத்தில் தான் கொலையாளியான வீரக்குமார் தங்கியிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ)

### நல்லூரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன.

மகோற்சவத்தையொட்டிய வயிரவர் பூசை இன்று மாலை இடம்பெறும். மாலை 6 மணிக்கு வைரவர் வீதியுலா இடம்பெறும்.

நல்லூர் கோயில் சூழலில் உள்ள வீதிகளில் நாளை அதிகாலை 4 மணி முதல் வீதித் தடைகள் போடப்படும்.

கொடியேற்ற தினமான நாளை பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆலயத்தில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

யாழ்-வன்னி தொடர்புச் சேவை:

## செய்திப் பரிமாற்றம் பற்றி மக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 23

நெருக்கடியான யாழ்.-வன்னி தொடர்புச் சேவையூடாகச் செய்திகளைப் பரிமாறிக் கொள்பவர்கள் சிலர் தவறான வழிகளைக் கையாள்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பொதுமக்களுக்கு விளக்கக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:

கையேற்கப்படும் செய்திகள் பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருத்தல் சம்பந்தமான செய்திகள், மரண அறிவித்தல் செய்திகள், சலுகை அடிப்படையில் அமைந்த செய்திகள், வியாபாரச் செய்திகள் சலுகை அடிப்படையில் அமையாத ஏனைய வழமையான செய்திகள் என்ற வகையில் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஆனால் வியாபார நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் முகமாக அமைந்த செய்திகளை அனுப்புபவரும், கையேற்பவரும் தமக்குள் மட்டும் விளங்கிக் கொள்ளக் கூடிய மறைப்புச் சொற்களை பிரயோகித்து வழமையான செய்திகள் போன்று இவற்றைப் பரிமாறுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறான தவறான முறையில் செய்திகள் கையளிப்போர் கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களிற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

கல்வி அபிவிருத்திக் கழக திறப்பன்பாடு பற்றி கோட்ட ரீதியாக நடைபெற்று வரும் பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல்களில் இன்று வேலாயுதம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 2 - 30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ - 5)

### இலங்கை இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர் படகுகளை எதிர்பார்த்து இரவு நேரம் நடுக்கடலுக்குச் சென்று கொண்டிருந்த சமயம் இவர்களது படகு நீரில் தத்தளித்தது என்றும்—

மீனவர்கள் நீரில் குதித்து நான்கு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் கரை திரும்பினர் என்றும் —

அவர்களில் ஒருவரான பேசாலையைச் சேர்ந்த கொன்சால் டயஸ் என்பவர் நீரில் மூழ்கி மரணமானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மன்னாரில் பதற்றம் நிலவுகிறது. (இ)

### மட்டு நகருக்கு ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் முழுமையாக சோதனைகள் செய்யப்படுகின்றனர். பெரும் எண்ணிக்கையான தமிழர்களை இராணுவம் கைது செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழர்கள் இரவு வேளைகளில் வீட்டை விட்டு வெளியே வர இன்னமும் அஞ்சுகின்றனர்.

பத்தாண்டுகளுக்கு (1983 ஜூலை) முன்னர் இலங்கையின் இனக்கலவரங்களை உலகின் கனத்துக்குக் கொண்டு வந்த அதே வார இறுதியில் ஜனாதிபதி விஜேதுங்கா இன்று மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொள்கிறார்.

—இவ்வாறு மட்டக்களப்பில் இருந்து பி.பி.ஸி. செய்தியாளர் சியாகோ நுவாஸ் தெரிவித்துள்ளார். [ஓ-எ-6]

### புதிய சப்பறம்

நீர்வேலி வாய்க்கால் தரவைப்பிள்ளையார் கோவிலுக்குச் செய்யப்படும் புதிய சப்பறத்தில் 31 – 7 – 1993 சனிக்கிழமையன்று விநாயகப் பெருமான் வீதி வலம் வருவார் (க-110)

### பெரு மழை

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2. 30 மணி முதல் பச்சிலைப்பள்ளி, தென்மராட்சிப் பகுதிகளில் பெருமழை பெய்துள்ளது. நீண்டநாட்களாக வரட்சியால் பாதிக்கப்பட்ட இப் பகுதிகளில் யார்க்கும் இடமெங்கும் வெள்ளமாக காணப்பட்டது. (க- 117)

### மண்எண்ணெய் வழங்கல்

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 21ஆம் திகதி முதல் குடும்ப அட்டை, பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண்எண்ணெய் வழங்கி வருகிறது.

### மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம் சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக்களஞ்சிய பகுதியினரால் இவ்வாண்டுக்கான இரண்டாம் கட்ட மருந்து வகைகள் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க வைத்திய சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. [க-152]

### நிவாரணம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேர் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்குபற்றினர்.

அவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் இம்மாத இறுதியுடன் நிறுத்தப்பட்டு அடுத்த மாதம் முதல் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள செட்டிகுளம் பகுதியில் வைத்து அது வழங்கப்படும் என புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளதைக் கண்டித்தே அந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

மடு அகதிமுகாம் ஊடாகச் சென்ற அந்தப் பேரணி அங்குள்ள உதவி அரச அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது.

ஜனாதிபதி, புனர்வாழ்வு அமைச்சர், அரச அதிபர், உதவி அரச அதிபர் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட மகஜர்கள் அங்குவைத்துக் கையளிக்கப்பட்டன.

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் அதிவண இராயப்பு ஜோசவ், மற்றும் அங்குள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதி ஆகியோருக்கும் மகஜர்கள் வழங்கப்பட்டன. (ஓ-5)

---


கோப்பாய் பாலனை

**கண்ணகை அம்மன் கோவில்**

வருடாந்த மகோற்சவ

**அலங்காரத் திருவிழா**

மேற்படி திருவிழா 24-07-93 சனிக்கிழமை ஆரம்பமாகி 12 தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

தேர்த்திருவிழா: 1-8-93 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கும்

தீர்த்தத்திருவிழா: 2-8-93 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கும் நடைபெறும்.

★ தினமும் 12.00 மணிக்கு 1.00 மணிக்கும் இடையில் தெய்வீகப் பேருரை இடம்பெறும்.

[வி/5507] பரிபாலனசபை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன்
சிமெந்துக் கூட்டுத்தாபனம்

## விசேட பொதுக் கூட்டம்

காலம்: 24-7 93 சனிக்கிழமை காலை 9-30 மணி
இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்
தலைவர்: திரு. நா. நடராசா
விடயம்: தொழிற்சாலையின் இன்றைய நிலை

சகல தொழிலாளர்களையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

வ சுப்பிரமணியம்,
செயலாளர்.
21-07-93. (26608)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் K. காமாட்சிசுந்தரம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட எமது சக மாணவனின் தந்தையின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

3 ஆம் வருட மாணவர்கள்,
சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்
(26640)

## 57 ஆம் நாள் நினைவஞ்சலியும் திதியும்

தாவடியில் மலர்வு
10—11—1970
●
இத்தரணியில் உதிர்வு
26—05—1993
●
திதி:
23—07—1993



### திருமதி யமுனா வரதராஜன்

சுடர்போல பிரகாசித்தாய் உலகெங்கும்
உங்கள் திருமேனி ஒளித்ததே உலகெங்கும்
உங்கள் வாய் மொழி கேட்டு மலர்ந்தோமே
இப்போது உங்கள் நிழல் கூடத்தெரியாமல்
பறந்தாயே எங்கே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பெற்றோர், சகோதர சகோதரிகள்,
மற்றும் மாமன் மாமி உற்றார் உறவினர்கள்;
காளி கோவிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(26641)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினா நவரத்தினம்

இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபரும், வடமாநிலக் கல்விப் பணிப்பாளருமாகிய திருமதி இரத்தினா நவரத்தினம் கனடாவில் 18-06-93 இல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா கற்பகம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற நவரத்தினம் (கணக்காளர் புகையிரதப் பகுதி) அவர்களின் சகதர்மினியும், காலஞ்சென்றவர்களான திருமதி இராசரத்தினம், விரசிங்கம், திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரு, செ. துரைராஜசிங்கம் ஆகியோரினதும், திருமதி அழகரத்தினம் தேவதாசன் அவர்களினது சகோதரியும், காலஞ்சென்றவர்களான கா. சுப்பிரமணியம், கா. சிவப்பிரகாசம், கா. கனகரத்தினம் ஆகியோரினதும் செல்வி நா. காசிப்பிள்ளை, திருமதி துரைராஜசிங்கம், திருமதி சோதிரத்தினம் இராசையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

தகவல்
திருமதி விமலா கிருஷ்ணபிள்ளை
(பெறாமகள்)
15, வலுக்கராம் வீதி,
கொழும்பு, 3
(6605)

## வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23
நல்லூர் வட்டப் பிரதேசத்தைச் சேர்ந்த—7 ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த—மாவீரர்களை நினைவு கூர்ந்து திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் கோயில் முன்றலில் இன்று இரவு 7.30 மணிக்கு வீர வணக்கக் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் கருத்துரையாற்றுவர். இறுதியில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஓ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டங்களும் மூன்றாம் இடத்தைப்பெறும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான ஆட்டங்களும் இன்று பிற்பகல் 2.30 மணி முதல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். விபரம் வருமாறு:

17 வயதுப் பிரிவு

★ மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யூனியன் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் ம. வி.
★ இறுதியாட்டத்தில் மெதடிஸ் மகளிர் கல்லூரி எதிர் கனகரத்தினம் ம. ம. வி.

19 வயதுப் பிரிவு

★ மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி எதிர் கண்டுக்குளி மகளிர் கல்லூரி

இறுதியாட்டம்:- உடுவில் மகளிர் கல்லூரி எதிர் மெதடிஸ் மகளிர் கல்லூரி

o o o

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டம் ஒன்றும் காட்சி ஆட்டம் ஒன்றும் இன்று பிற்பகல் 3 30 மணி முதல் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பங்குபற்றும் கழகங்கள் வருமாறு:-

★ நாவாந்துறை சென். மேரிஸ் எதிர் பாஷையூர் சென் அன்ரனீஸ் — காட்சி ஆட்டம்.
★ பாஷையூர் சென் அன்ரனீஸ் எதிர் இளவாலை யங் ஹென்றியன். (உ)


## கலை வர்த்தக கல்லூரி
### C. C. A.
வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

### A/L 94
மீட்டல் வகுப்பு
ஆசிரியர் குழு:

பொருளியல் — திரு. உதயன் 3 - 4
கணக்கியல் — திரு. ஸ்ரீ 12 - 1
வர்த்தகம் — திரு. ரட்ணம் 1 - 2
அளவையியல் — திரு. சயந்தன் 2 - 3
புவியியல் — திரு. வேலா 10 - 11
இந்துநாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன் 11-12
தமிழ் — திரு. தங்கராஜா 2 - 3
அரசியல் — திரு. பஞ்சு 10 - 11
கிறிஸ்தவம் — திரு. விமலதாஸ் 11 - 12

ஆரம்பம்:
24 — 07 — 1993

### A/L 95
புதிய அலகுகளுடன் ஆரம்பம்.

ஆரம்பம்:
24 — 07 — 1993
(பி/5656)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி கனகசபை

தென்மயிலையைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு வன்னியசிங்கம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கனகசபை 22-07-1993 இணுவிலில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், பரஞ்சோதி, மகாலிங்கம் (விக்கினேஸ்வரா ஸ்ரோர் சுன்னாகம்), சிவசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தன் (P.H F.A. AMC சாவகச்சேரி), மனோகரி, தங்கராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற செல்லமுத்து, இராசம்மா ஆகியோரின் சகோதரியும், இராமசாமி, குகப்பிரசாதன் ஆகியோரின் மைத்துனியும், நிமலன், நிரேகா, சஜந்தினி, சுபாங்கி, விதுர்சினி, தசி, தர்சிகா, நிருதா, நிரோஜா, ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-7 93) நடைபெற்று தகனக் கிரியைகள் தாவடி மயானத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
க. மகாலிங்கம் (மகன்).
இணுவில் தெற்கு,
இணுவில்.
(26633)

### திருமதி கமலாம்பிகை நடராசா
(கரவெட்டி)

திரு. க. நடராசாவின் மனைவி திருமதி கமலாம்பிகை 21-07-1993 இல் காலமானார்.

அன்னார் கீதாஞ்சலியின் அன்புத் தாயாரும் சிவா அரிசி ஆலை, க. இலட்சுமியின் அன்பு மகளுமாவார்.

இவரது இறுதிக்கிரியை 21-07-1993 அன்று பிற்பகல் சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி தாயாரின் இல்லத்தில் நிகழ்வுற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
க. நடராசா
[கணவன்]
கமலா அரிசி ஆலை, வதிரி,
கரவெட்டி.
(26636)

### நயினாதீவு பண்டிதர், வித்துவான் கந்தசாமி காமாட்சிசுந்தரம்
(இளைப்பாறிய அதிபர்)

நயினாதீவு காலஞ்சென்ற திரு. திருமதி கந்தசாமி தம்பதிகளின் அன்பு மகனும், திரு. திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனுமான காமாட்சிசுந்தரம் 22 07-93 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் கனகம்மா (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், பிரேமலதா (ஆசிரியை, முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம் கைதடி), மனோரதி (கனடா), அருட்செல்வன் (ஜேர்மனி), நடேசராஜன் (சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), மனோரஞ்சன் (மருத்துவபீடம், 1 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் சபாநாதன் (கைதடி), சோதிராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜீவ், சுகன்யா, கோபிகாந், கோகுல்காந், ரம்மியா ஆகியோரின் ஆசைப் பேரனும், மகேஸ்வரி, கனகசபாபதி (கனடா), குகதாசன் (இளைப்பாறிய கல்வி அதிகாரி), சவுந்தரம், பராசக்தி, மகாலிங்கம் (மானிப்பாய்), இராசரெத்தினம், கமலாம்பிகை (ஆசிரியை), லலிதாம்பாள் (ஆசிரியை), பரமலிங்கம் [செயலர், வட - கிழ மாகாணசபை], மகாதேவா [இளைப்பாறிய தபால் அதிபர்], ஞானசுந்தரம் [அதிபர்]. டாக்டர் நவரெத்தினராஜா [ஆபிரிக்கா] ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாம்பிகை, கந்தசாமி, இராசம்மா [ஆசிரியை] ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற குணரத்தினம், பவானி, அப்பாத்துரை [இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-07-93) மாலை 3 மணிக்கு கைதடியில் நடைபெற்று பூதவுடல் வரியான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் கோ. சபாநாதன்
(மருகர்)
''மெடிக்கல் சென்ரர்''
கைதடி.
(26637)

### திருமதி விசாலாட்சிப்பிள்ளை

வடமராட்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற குழந்தைவேலு (PILOT OFFICER - BURMA) அவர்களின் அன்பு மனைவியும், வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய விசாலாட்சிப்பிள்ளை 22-7-93 இல் சாவகச்சேரியில் மகனின் இல்லத்தில் காலமானார்.

இவர் திரு. திருச்சிற்றம்பலம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்-நீர்ப்பாசனத் திணைக்களம்), திருமதி சிறீசாந்திமதி [வவுனியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சேதுகாவலர் [வவுனியா - TRACTOR UNIT INSTRUCTOR], திருமதி தி. இராஜேஸ்வரி [ஓய்வு பெற்ற ஆசிரியை] ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி திருமகள் சந்திரநாதன், கதிர்மகள், பரந்தாமன், வவுனியாவைச் சேர்ந்த றஜினி, மாலினி, சிவாஜினி, தியாகினி, வீரச்சாவடைந்த 2 ஆம் லெப். கண்ணன், றஞ்சன், காலஞ்சென்ற ராஜன், நந்தினி, சாந்தினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் சாவகச்சேரியில் இன்று [23-07-1993] வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. திருச்சிற்றம்பலம்
[மகன்]
'ராஜ் மகால்'
மடத்தடி வீதி,
சாவகச்சேரி.
(26635)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/2 இலுள்ள அச்சகத்தில் 23-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org